## திருச்சிராப்பள்ளி கூடுதல் தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

## பிறப்பிப்பவர் - திரு.எம்.பாலசுப்பிரமணியன் M.L.M.,P.G.D.L.A.,

### சுருக்கம்

பணிக்குழு - தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத்துறை - தமிழ்நாடு அமைச்சுப் பணி - செல்வி.இர,தீரஜா, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டது - திருச்சிராப்பள்ளி தொழிலாளர் துணை ஆணையர் (சமரசம்) அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்டது - பணியில் சேர்ந்த நாள்முதல் பணிவரன்முறை செய்யப்பட்டு தகுதிகாண் பருவத்தில் அமர்த்தி உத்தரவிடப்படுகிறது

---

அ/2627/2021

நாள் .11.2021

படிக்கப்பட்டது

1. அரசாணை எண் 190, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள் 20.09.2007
2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடிதம் எண் 2387/PSD-1/2020 நாள். 28.05.2020.
3. சென்னை தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண் ஜி3/16386/2020-1 நாள் 29.07.2020.
4. திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் துணை ஆணையர் (சமரசம்) கடிதம் எண் ஆ/376/2021 நாள் 24.09.2021.
5. திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் இணை ஆணையர் அவர்களின் கடித எண். அ2/4519/2021 நாள். 15.11.2021.

------

***ஆணை***

மேலே (2) மற்றும் (3)ல் படிக்கப்பட்ட கடிதங்களின்படி சென்னை, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட செல்வி.இர,தீரஜா, பார்வை (3)ல் காணும் சென்னை தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் துணை ஆணையர் (சமரசம்) அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்டு, 05.08.2020 அன்று முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்

எனவே, செல்வி.இர,தீரஜா, இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாளான 05.08.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தப்பட்டு, பணிவரன்முறைப்படுத்தப்பட்ட நாள் முதல் மூன்றாண்டு தொடர்பணியில் இரண்டாண்டு காலத்திற்கு தகுதிகாண் பருவத்தில் அமர்த்தப்படுகிறார்.

தனியரின் பணிவரன்முறையானது, சென்னை / மதுரை கிளை உயர்நீதிமன்றங்களில் 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த குடிமைபணிகள் தேர்வுகள்-IV-ன் தெரிவிற்கெதிராக நிலுவையிலுள்ள ரிட் மனுக்களின் இறுதி தீர்ப்பிற்குட்பட்டது எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகுதிகாண் பருவகாலத்தில் தனியர் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் இளநிலை உதவியாளர்களுக்கு அளிக்கப்படும் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும் என்றும், தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேற்கண்ட நிபந்தனைகளை நிறைவு செய்தால்தான் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவத்தினை முடித்தவராக அறிவிக்கப்படும் எனவும், இரண்டாம் மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் அனுமதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட நிபந்தனைகளை நிறைவு செய்தபின் உரிய காலகெடுவுக்குப்பின் தகுதிகாண் பருவம் நிறைவு செய்தமைக்கு சம்பந்தப்பட்ட அலுவலரால் உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கூடுதல் தொழிலாளர் ஆணையர்,
திருச்சிராப்பள்ளி

பெறுநர்
செல்வி.இர,தீரஜா,
இளநிலை உதவியாளர்,
தொழிலாளர் துணை ஆணையர் (சமசரசம்) அலுவலகம், திருச்சிராப்பள்ளி. (உரிய வழியாக)

<u>நகல்</u>

1. தொழிலாளர் துணை ஆணையர், (சமரசம்) திருச்சிராப்பள்ளி. — தனியரது பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தை பணிப்பதிவேட்டில் பதிவு செய்து அதன் விவரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்,

2. தொழிலாளர் இணை ஆணையர் திருச்சிராப்பள்ளி.

**நகல் பணிந்தனுப்பப்படுகிறது.**
**தொழிலாளர் ஆணையர், சென்னை - 06**

**நகல் - பணிப்பதிவேடு / உபரி**